அருப்புக்கோட்டையில்

சிவசக்தி மக்கள் நல அறக்கட்டளை முதலாம் ஆண்டு தொடக்க விழா

▶ அருப்புக்கோட்டையில் நடந்த விழாவில் சிவசக்தி மக்கள் நல அறக்கட்டளை நிறுவனர் பிரபஞ்ச ஜோதிடர் குருஜி செந்தில்குமார் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

நலத்திட்ட உதவிகள் வழங்கல்

அருப்புக்கோட்டை, ஜூலை 15: அருப்புக்கோட்டையில் சிவசக்தி மக்கள் நல அறக்கட்டளையின் முதலாம் ஆண்டு விழா நடந்தது. விழாவில் அறக்கட்டளையின் நிர்வாகிகள், உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர். விழாவில் அறக்கட்டளையின் கடந்த ஓராண்டு சமூகப் பணிகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள சமூக நலத் திட்டங்கள் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அருப்புக்கோட்டை மற்றும் சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட ஆதரவற்றோர், முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு அறக்கட்டளை நிறுவனர் மற்றும் தலைவர் பிரபஞ்ச ஜோதிடர் குருஜி செந்தில்குமார் அரிசி, பருப்பு, மளிகை பொருட்கள் உள்ளிட்ட உணவுப் பொருட்களை வழங்கினார்.

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக பக்தி இன் பினிட்டி சேனல் சாய் செந்தில், சின்னத்திரை புகழ் நல்லநேரம் நாகராஜ் சுவாமிகள், பாலாறு வேலாயுதம் சுவாமிகள், பட்டிமன்ற பேச்சாளர் துரைப்பாண்டியன், கயிலை மணி விமலா சுப்பிரமணியன், ஆன்மீக சொற்பொழிவாளர் ஆடிட்டர் கலைச்செல்வி, உதவிசெயற் பொறியாளர் விஜயக்குமார், வளவன் அருணாச்சலம் உள்ளிட்டோர் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினர். ஏற்பாடுகளை சீரணி ரமேஷ் அறக்கட்டளை செயலாளர் ராஜேஸ் வரி, பொருளாளர் நத்தர் பாட்ஷா மற்றும் சிவசக்தி மக்கள் நல அறக்கட்டளை நிர்வாகிகள் செய்திருந்தனர். தென்னக ரயில்வே குமரேசன் நன்றி கூறினார்.

சிறுமிக்கு தாலி கட்டியவர் மீது போக்சோ வழக்கு



சாத்தூர், ஜூலை 15: சாத்தூர் அருகே சிறுமியை திருமணம் செய்தவர் மீது போக்சோவில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

சாத்தூர் அருகேஉள்ள கிராமத்தை சேர்ந்த 16 வயது சிறுமி சத்திரப்பட்டியை சேர்ந்த வீரராஜ் என்பவரை காதலித்து வந்துள்ளார். இருவரும் வீட்டுக்கு தெரியாமல் கடந்த பிப்ரவரி மாதம் திருமணம் செய்து வெம்பக்கோட்டை பகுதியில் தனியாக வசித்து வந்துள்ளனர். இந்த நிலையில் கர்ப்பமான சிறுமி நேற்று முன்தினம் சிகிச்சைக்கு மருத்துவமனைக்கு சென்றுள்ளார். அங்கு அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள் சிறுமி என அறிந்ததும், வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலக ஊர் நல அலுவலர் மகாலட்சுமிக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை செய்த ஊர் நல அலுவலர், சிறுமியை திருமணம் செய்து கர்ப்பிணியாக்கிய வீரராஜ் மீது நடவடிக்கை எடுக்குமாறு சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் வீரராஜ் மீது போக்சோவில் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே

வீட்டில் நிறுத்தியிருந்த கார் நள்ளிரவில் திருட்டு

ஸ்ரீவில்லிபுத்தூர், ஜூலை 15: ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே வீட்டில் நிறுத்தியிருந்த காரை மர்மநபர்கள் திருடிச் சென்றனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே உள்ள சுந்தர பாண்டியம் பகுதியை சேர்ந்தவர் ஞானசவுந்தரி(55). இவர் தனது மகள்களை பார்ப்பதற்காக கடந்த 30ம் தேதி சென்னைக்கு சென்றார். இந்நிலையில் அவரது வீட்டு கதவு உடைக்கப்பட்டு போர்டிகோவில் நின்ற கார் திருடப்பட்டிருந்தது. இதை பார்த்து அதிர்ச்சியடைந்த அக்கம்பக்கத்தினர் உடனடியாக சென்னையில் உள்ள ஞானசவுந்தரிக்கு தகவல் கொடுத்தனர்.

இதையடுத்து சென்னையில் இருந்து கிளம்பி வந்த ஞானசவுந்தரி வீட்டுக்கு வந்து பார்த்தபோது போர்டிகோவில் நிறுத்தப்பட்டிருந்த கார் திருடு போயிருந்தது. மேலும் வீட்டில் மெயின் கதவு உடைக்கப்பட்டு பீரோக்கள் அனைத்தும் திறந்து இருந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த ஞானசவுந்தரி கிருஷ்ணன்கோவில் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். புகாரின் அடிப்படையில் இன்ஸ்பெக்டர் சங்கர் கண்ணன் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினார். இதில் அதே பகுதியை சேர்ந்த முத்துச்சாமி(37) என்பவர் காரை திருடியது தெரியவந்தது. இதையடுத்து அவரை கைது செய்த போலீசார், காரை பறிமுதல் செய்தனர்.

▶ ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே கார் திருடப்பட்ட வீட்டில் பீரோ உடைக்கப்பட்டிருந்தது.

காளியம்மன் கும்பாபிஷேகம்

▶ ஸ்ரீவில்லிபுத்தூர் தெற்கு ரத வீதி-மேல ரத வீதி சந்திப்பு பகுதியில் அமைந்துள்ள காளியம்மன் கோயில் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. இதில் தலைவர் அய்யனார் மற்றும் முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர்.

நகராட்சி சுகாதார பிரிவு சார்பில்

டெங்கு விழிப்புணர்வு பேரணி

விருதுநகர், ஜூலை 15: விருதுநகரில் நகராட்சி சுகாதார பிரிவு சார்பில் டெங்கு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

டெங்கு காய்ச்சல் பரவுவதைத் தடுக்கவும், அதன் அறிகுறிகள் மற்றும் பாதுகாப்பு முறைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் பள்ளிகள், கல்லூரிகளில் சுகாதாரத்துறை சார்பில் விழிப்புணர்வு பேரணிகள் நடத்தப்படுகின்றன. விருதுநகரில் நகராட்சி சுகாதார பிரிவு சார்பில் டெங்கு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. நன்னீரில் உற்பத்தியாகும் ஏடீஸ் கொசுக்களால் டெங்கு காய்ச்சல் பரவுகிறது. எனவே, அக்கொசுக்கள் உற்பத்தியாகாமல் தடுக்க சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டும். குடியிருப்புகள் அருகே தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும், பழைய டயர், பிளாஸ்டிக் கழிவு பொருட்கள், தேங்காய் சிரட்டை ஆகியவற்றை உடனுக்குடன் அகற்ற வேண்டும் என பேரணி மூலம் வலியுறுத்தப்பட்டது.

இந்த பேரணியை விருதுநகர் நகராட்சி அலுவலகம் முன்பு ஆணையர் விஜயகுமார் கொடியசைத்து துவக்கி வைத்தார். சுகாதார அலுவலர் பழனிசாமி, சுகாதார ஆய்வாளர்கள் செந்தில்ஆண்டவர், ராஜபாண்டி, தமிழ்செல்வன் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் பேரணியில் பங்கேற்றனர்.

இதில், நகராட்சி பணியாளர்கள் டெங்குவை ஒழிப்பதற்கான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு சென்றனர். இப்பேரணி முக்கிய வீதிகள் வழியாக சென்று நகராட்சி அலுவலகத்தில் முடிவுற்றது

கஞ்சா விற்பனை செய்த 6 வாலிபர்கள் கைது

சிவகாசி/ராஜபாளையம், ஜூலை 15: சிவகாசி, ராஜபாளையத்தில் கஞ்சா விற்பனை செய்த 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

சிவகாசி அருகே செங்கமலநாச்சியார்புரம் சாலையில் திருத்தங்கல் எஸ்ஐ முத்துமாரியப்பன் மற்றும் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்குள்ள கால்நடை மருத்துவமனை அருகில் கஞ்சா விற்பனை செய்து கொண்டிருந்ததாக சிவகாசி சுந்தரம் தெருவை சேர்ந்த ராஜபாண்டி(எ) அஜய்(21), அம்மன்கோவில் பட்டி சங்கர்பாண்டி(24), சாட்சியாபுரம் கந்தபுரம் காலனியை சேர்ந்த ராஜரத்தினம்(20) ஆகியோரை கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 150 கிராம் கஞ்சாவையும் பறிமுதல் செய்தனர். வாலிபர்களிடம் போலீசார் நடத்திய விசாரணையில் விற்பனைக்காக மும்பையில் இருந்து 2 கிலோ கஞ்சா வாங்கி வந்ததும் மீதி கஞ்சாவை சித்துராஜபுரத்தை சேர்ந்த பவித்குமார் என்பவரின் வீட்டின் பின்புறம் பதுக்கி வைக்கப்பட்டதும் தெரியவந்தது. அதனை தொடர்ந்து போலீசார் சித்துராஜபுரத்துக்கு சென்று பவித்குமார் வீட்டின் பின்புறம் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 1240 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்தனர். பவித்குமாரை தேடி வருகின்றனர்.

இதேபோல் ராஜபாளையம் அருகே சத்திரப்பட்டி சாலையில் வேலாயுதபுரம் பஸ்ஸ்டாப் பகுதியில் தெற்கு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் இலக்கிய முத்து மற்றும் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது 3 நபர்கள் கஞ்சா பொட்டலங்களை வைத்து நின்று கொண்டிருந்தனர். விசாரணையில் சேத்தூர் பகுதியைச் சேர்ந்த சிவா, அய்யனார் மற்றும் வேலாயுதபுரம் கிராமத்தைச் சேர்ந்த வீரமுத்து என்பது தெரியவந்தது. இதையடுத்து அவர்களிடம் இருந்த 35 கிராம் கஞ்சா பொட்டலங்களை போலீசார் பறிமுதல் செய்து 3 பேரையும் கைது செய்தனர்.

சிவகாசி மாணவிக்கு

வெளிநாட்டில் 'டாக்டர் சீட்' தருவதாக ரூ.2 லட்சம் மோசடி

3 பேர் மீது வழக்கு

சிவகாசி, ஜூலை 15: வெளிநாட்டில் டாக்டர் சீட் வாங்கி தருவதாக ரூ.2 லட்சம் மோசடி செய்த 2 பெண்கள் உள்பட 3 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

சிவகாசி அருகே சித்துராஜபுரத்தில் உள்ள இ.சேவை மையத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் மம்சாபுரத்தை சேர்ந்த கருப்பசாமி மனைவி முனீஸ்வரி(46) பணியாற்றி வருகிறார். இவரது மகள் 12ம் வகுப்பு முடித்துவிட்டு மருத்துவ படிப்பில் சேருவதற்காக நீட் தேர்வு எழுதியுள்ளார். அதில் தோல்வி அடைந்த நிலையில் மறுபடியும் நீட்தேர்வு எழுதலாம் என்று படித்து வந்தார். இந்த நிலையில் முனீஸ்வரியை செல்போன் மூலம் தொடர்பு கொண்ட சேலத்தை சேர்ந்த திவ்யா என்ற பெண், வெளிநாட்டில் மருத்துவ படிப்பிற்கான சீட் வாங்கி தருவதாக கூறி ரூ.2 லட்சம் பெற்றுள்ளார். தொடர்ந்து முனீஸ்வரியின் மகளை உஸ்பெகிஸ்தான் நாட்டிற்கு அழைத்து சென்றுள்ளார். அங்கு மருத்துவ கல்லூரியில் சேர்க்காமல் ஓட்டலில் தங்க வைத்துள்ளனர். இதனால் ஏமாற்றம் அடைந்த மாணவி உஸ்பெகிஸ்தானில் இருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் திரும்பினார். திவ்யாவிடம் கொடுத்த பணம் ரூ.2 லட்சத்தை முனீஸ்வரி திருப்பி கேட்டுள்ளார்.

அதற்கு பணத்தை திருப்பி தராமல் திவ்யா ஏமாற்றி வந்துள்ளார். இது குறித்து சிவகாசி டவுன் போலீசில் முனீஸ்வரி கொடுத்த புகாரின் பேரில் சேலத்தை சேர்ந்த திவ்யா, காயத்ரி, கோவை சரவணம்பட்டியை சேர்ந்த லோகேஷ் ஆகிய 3 பேர் மீது போலீசார் வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தூக்கு போட்டு பெண் தற்கொலை

ராஜபாளையம், ஜூலை 15: ராஜபாளையத்தில் பெண் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

ராஜபாளையம் திருவள்ளுவர் நகரை சேர்ந்தவர் சக்திவேல் மனைவி சிந்து(45). இவர்களுக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். கடந்த சில நாட்களாகவே சிந்து மனநிலை பாதிக்கப்பட்டது போல் அனைவரிடமும் அடிக்கடி கோபப்பட்டு பேசி வந்ததாக கூறப்படுகிறது. அடிக்கடி சாகபோறேன் என்றும் சொல்லி வந்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் நேற்று சிந்து தனது வீட்டில் தூக்குமாட்டி சாக போறேன் என்று மகளுக்கு போன் செய்துவிட்டு கட் செய்துவிட்டார். இதையடுத்து வீட்டுக்கு சென்று பார்த்தபோது சிந்து தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது. தகவல் அறிந்த வடக்கு காவல்நிலைய போலீசார் அவரது உடலை மீட்டு ராஜபாளையம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். இன்ஸ்பெக்டர் சந்திரன் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றார்.

மது பாட்டில் பறிமுதல்

ராஜபாளையம், ஜூலை 15: ராஜபாளையத்தில் சட்டவிரோதமாக மது விற்ற 2 பேர் கைது செய்யப்பட்டனர். ராஜபாளையம் பெரிய கடை பஜாரைச் சேர்ந்த கஜேந்திரன், அம்மன் பொட்டல் தெருவை சேர்ந்தவர் வைரமுத்து. இருவரும் செவல்பட்டி தெருவில் அரசு மது பாட்டிலை வாங்கி கூடுதல் விலைக்கு விற்பதாக வடக்கு காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்தது. தகவலின் பேரில் சார்பு ஆய்வாளர் ராஜ்குமார் போலீசாருடன் சென்று இருவரையும் பிடித்து அவர்களிடமிருந்து 80 மது பாட்டில்களை பறிமுதல் செய்தனர்.

நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

(முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று அறியப்பட்டது) (இனிமேல் நிடோ என்று குறிப்பிடப்படுகிறது)

பதிவு அலுவலகம் அமைந்துள்ள இடம்: டவர் 3, ஐந்தாவது தளம், விங் B, கோஹினூர் சிட்டி மால், கோஹினூர் சிட்டி, கிரோல் சாலை, குர்லா (மேற்கு), மும்பை-400 070, பிராந்திய அலுவலக இடம்: நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று அறியப்பட்டது) எண்.19, 7வது தளம், கோச்சார் டவர்ஸ், வெங்கட்நாராயணா சாலை, தி.நகர், சென்னை-600017.

சுவாதீன அறிவிப்பு சர்ஃபாசி சட்டம், 2002 இன் விதி 8(1) இன் கீழ்

இவ்வாறிருக்க கீழே கையெழுத்திட்டவர் நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது) அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் (இரண்டாம்) சட்டம், 2002 (2002 இன் விதி 3) உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி கோரிக்கை அறிவிப்பு ஒன்றை கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்/கள் வழங்கி, அந்த அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளபடி கடனைத் திருப்பிச் செலுத்தும் நாள் வரையிலான அனைத்துவிதமான செலவினங்கள், கட்டணங்கள், செலவுகளின் தொகையை மேற்கூறிய அறிவிப்பு கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தக் கோரி அழைப்பு விடுத்திருந்தார். குறிப்பிடப்பட்ட கடன்தாரர்கள்/ உப கடன்தாரர்கள் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளனர். இதன்மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் வழங்கப்படும் அறிவிப்பாவது, கீழே கையொப்பமிட்டவர் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13 (4) இன் கீழ் அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்தினை அடையாளப்பூர்வ/ஆக்கப்பூர்வ கவாதீனம் செய்துள்ளார். கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் மேலும் பொதுமக்களுக்குப் பொதுவாகவும் இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது: சொத்துகளுடன் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம் என்றும் மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கைகளும் கடன்தொகை மற்றும் அதற்கான எதிர்கால வட்டி, அனைத்துவிதமான செலவினங்கள், கட்டணங்கள், செலவுகளின் தொகை ஆகியவற்றை குறிப்பிட்ட தேதியிலிருந்து நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது) வசூலுக்கு உட்படும். கடன்தாரர்கள், உப கடன்தாரர்கள், உத்தரவாதமளிப்பவர்கள், ஜாமீன்தாரர்கள், நிலுவைத் தொகை, பிரிவு 13(2) இன்படி அளிக்கப்பட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை மற்றும் சுவாதீன தேதி ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1.கடன்தாரர், உப கடன்தாரர், ஜாமீன்தாரர் ஆகியோர் பெயர் மற்றும் முகவரி, மற்றும் கடன் கணக்கு எண், கடன் தொகை:

மாரிமுத்து ஆர் (இப்போது இறந்துவிட்டார்) (கடன்தாரர்), கல்யாணி கலாராணி புவனேஸ்வரி கோகிலா சந்தோஷ்குமார் இறந்த கடன்தாரரின் சட்டப்பூர்வ வாரிசு மற்றும் பிரதிநிதிகள், கலாராணி மாரிமுத்து, கல்யாணி ராஜகண்ணு (உப கடன்தாரர்)
புதிய எண்.103 பழைய எண்.102 பிள்ளையார் கோவில் தெரு, இன்டக் காலனி மதுரை தெற்கு, போஸ்ட் கோச்சடை, மதுரை – 625016.
கடன் கணக்கு எண் : L0360STHL000005335048. கடன் ஒப்பந்தத் தேதி: 19–07–2024
கடன் தொகை: ரூ.8,60,000/– (எட்டு லட்சத்து அறுபதாயிரம் ரூபாய் மட்டும்)
கடன் கணக்கு எண் : L036STLAP000005335062. கடன் ஒப்பந்தத் தேதி: 19–07–2024,
கடன் தொகை: ரூ. 7,24,817/– (ரூபாய் ஏழு இலட்சத்து இருபத்து நான்கு ஆயிரத்து எண்ணூற்று பதினேழு மட்டும்)
கோரிக்கை அறிவிப்பு நாள்: 04.05.2026 **செயல்படா சொத்து நாள்:** 05.12.2025
நிலுவைத் தொகை: ரூ.9,44,216/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து நாற்பத்து நான்கு ஆயிரத்து இருநூற்று பதினாறு மட்டும்) மற்றும் **ரூ.8,34,045** (ரூபாய் எட்டு இலட்சத்து முப்பத்து நான்கு ஆயிரத்து நாற்பத்து ஐந்து மட்டும்) **மொத்தம் ரூ.17,78,261/–** (ரூபாய் பதினேழு இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து இருநூற்று அறுபத்தொன்று மட்டும்)
அடையாளப்பூர்வ/ஆக்கப்பூர்வ கவாதீனம் தேதி : 10–07–2026:

சொத்தின் அட்டவணை: சொத்தின் அமைப்பு விவரம்: மதுரை தெற்கு பதிவு மாவட்டம், அரசரடி துணைப் பதிவாளர் (குற்போது நாகமலை புதுக்கோட்டை துணைப் பதிவாளர்), மதுரை மேற்கு தாலுகா, அரப்பாளையம் கிராமம், பல்லவராயன் தோப்பு, மறு அளவை எண் 40/1, வடக்குப் பக்கம் 30 சென்ட், மேற்குப் பக்கம் 15 சென்ட் மற்றும் அந்த வடக்குப் பக்கம் 10 சென்ட், கிழக்குப் பக்கத்தின் மையப்பகுதியின் மொத்தப் பரப்பளவு 475 சதுர அடி. சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 323 சதுர அடி காலி நிலத்தில் வீடு கட்டப்பட்டுள்ளது. இதன் நான்கு எல்லைகள் பின்வருமாறு:– வடக்கு – சுருப்பையாவுக்குச் சொந்தமான வீடு; கிழக்கு – 15 அடி அகல பொதுச் சாலை; தெற்கு – தெய்வேந்திரனுக்குச் சொந்தமான நிலம்; மேற்கு – தெய்வேந்திரனுக்குச் சொந்தமான நிலம்; கிழக்குப் பக்கம் 15 அடி அகலமும், அதில் ஒரு பகுதி பொதுச் சாலைக்காக 7 ½ அடியும் விட்டு வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள கிழக்கு–மேற்குப் பகுதி வடக்குப் பக்கத்தில் 16 ½ அடியும், தெற்குப் பக்கம் 17 ½ அடியும், தெற்கு–வடக்கு பகுதி கிழக்குப் பக்கத்தில் 19 அடியும், மேற்குப் பக்கம் 19 அடியும் ஆகும். இதன் மொத்தப் பரப்பளவு 323 சதுர அடி நிலமாகும். இதில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் கதவு, ஜன்னல், கழிப்பறை, குளியலறை ஆகியவற்றைக் கொண்ட கட்டப்பட்ட வீடு, வைப்புத்தொகையுடன் கூடிய மின்சார இணைப்பு எண் 05–045–009–1062, வைப்புத்தொகையுடன் கூடிய குடிநீர் இணைப்பு மற்றும் அனைத்துப் பொருத்துதல்களுடன் கூடிய ஆழ்துளைக் கிணறு ஆகியவை உள்ளன. மேற்கூறிய சொத்தின் பழைய வரி மதிப்பீட்டு எண் 115/363276 மற்றும் புதிய மதிப்பீட்டு எண் 115/021/03753 ஆகும்.

இடம்: சென்னை
தேதி: 15.07.2026
ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி,
நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டிற்காக,
(முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)

சுவாதீன அறிவிப்பு

எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிட்.
CIN: U67100MH2007PLC174759
ரீடெய்ல் மைய & பதிவு அலுவலகம்: எடெல்வீஸ் இல்லம், சிஎஸ்டி சாலை தொலைவு, கலீனா, மும்பை 400098

பிற்சேர்க்கை IV [விதி- 8(1)] சுவாதீன அறிவிப்பு (அசையாச் சொத்துக்காக)

இவ்வாறிருக்க, **எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடின்** அதிகாரப்பூர்வ அதிகாரி பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் (சட்டம்), 2002 கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் (விதி 3) உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி கோரிக்கை அறிவிப்பு வழங்கி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மேற்கூறிய அறிவிப்பு கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார்.
அதன்பிறகு, கடனீட்டு கடன்தாரர் சர்ஃபாசி சட்டம், 2002 இன் பிரிவு 5 கீழ் செய்து கொண்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தத்தினை பின்பற்றி இஏஆர்சி பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் சொந்த/அதன் திறனில் செயல்படும் **எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடுக்கு** நிதிச் சொத்துகளை உரிமை ஒதுக்கீடு செய்துள்ளது. இஏஆர்சி ஆனது கடன்தாரரால் பெறப்பட்ட நிதி உதவி தொடர்பான கீழ்க்காணும் கடனீட்டு உரிமைகள், உத்திரவாதங்கள், அடமானங்கள் ஆகியவற்றுடன் நிதிச் சொத்துகள் தொடர்பான கடனீட்டு கடனீந்தோரின் அனைத்து உரிமங்கள், உரிமைப்பத்திரம் மற்றும் உரிமைகள் ஆனது இஏஆர்சி–க்கு வந்தடைந்துள்ளன. மேலும் இஏஆர்சி ஆனது கடனீட்டு கடனீந்தோராக அதன் அனைத்து உரிமைகளை செயல்படுத்துகிறது.
கடன்தாரர் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளதைத் தொடர்ந்து, இதன்மூலம் கடன்தாரர்(கள்). உப கடன்தாரர்(கள்), மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்ட **எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடின்** அதிகாரப்பூர்வ அதிகாரி கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் பிரிவு 13 இன் துணைப் பிரிவு (4) கீழ் உள்ள விதி 8 இன்படி சுவாதீனம் செய்துள்ளார்.

வ. எண்.	கடன் கணக்கு எண்& கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர் (கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பு தேதி & தொகை	பொறுப்பாட்சி விவரங்கள்	சுவாதீன நாள்	அடையாளப்பூர்வ/ கையக சுவாதீனம்
1	கடன் கணக்கு எண்: LMADSTL0000067515 போல்கலை p ("கடன்தாரர் ") 2. ததா p ("உப கடன்தாரர் ") 3. போல்கலை பால் வணிகம் ("உப கடன்தாரர் ")	23.03.2023 & Rs.12,16,120.68/-	இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி-451 எடெல்வீஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்	11.07.2026	அடையாளப்பூர்வ சுவாதீனம்

அசையாச் சொத்தின் விவரம்: "குறிப்பிடப்படும் சொத்தானது, மதுரை மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், உசிலம்பட்டி ஒன்றியம், உசிலம்பட்டி சிறப்பு வருவாய் அலுவலர் (SRO) ஆகியவற்றில் உள்ள நடுப்பட்டி கிராமம், சர்வே எண் 262/2–இல் அமைந்துள்ள, கிழக்கு திசையில் உள்ள 75 சென்ட், 0.30.5 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட தென்புற காலி வீட்டு மனையாகும். இதன் எல்லைகள் பின்வருமாறு: **வடக்கில்:** முத்தையாவின் மகன் காமாட்சியின் காலி வீட்டு மனை; **மேற்கில்:** முத்தையாவின் மகன் காமாட்சியின் காலி வீட்டு மனை; **தெற்கில்:** கிழக்கு–மேற்கு சாலை; **கிழக்கில்:** வடக்கு–தெற்கு சாலை. மேற்கூறிய மனையின் கிழக்கு–மேற்கு 51 அடி, தெற்கு–வடக்கு 54 அடி என மொத்தம் 2754 சதுர அடி பரப்பளவு உள்ளது".

2	கடன் கணக்கு எண்: HM/0126/H/18/100445 திரு. ஆர். கணேந்திரன் ("கடன்தாரர் ") திருமதி ஸ்ரீதேவி மகராராஜன் (உப கடன்தாரர் ")	13.05.2024 & Rs.4531137.77/-	இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி-425 பூனாவாலா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்	11.07.2026	அடையாளப்பூர்வ சுவாதீனம்

அசையாச் சொத்தின் விவரம்: மதுரை மாவட்டம், மதுரை தெற்குப் பதிவு மாவட்டம், கூடூடு 4வது துணைப் பதிவு அலுவலகம், மதுரை தெற்கு தாலுகா (குற்போது திருப்பரங்குன்றம் தாலுகா), மடக்குளம் கிராமம், பாலகநந்தம் புதிய மாநகராட்சி வார்டு எண் 92, தேவர் நகர் மேற்குப் பக்கம், பழைய மறு நில அளவை எண் 95/3, மேற்குப் பக்கத்தில் 1 ஏக்கர் 2 சென்ட், தெற்குப் பக்கத்தில் 73 சென்ட், நடுப் பக்கத்தில் 3 1/2 சென்ட் என மொத்தம் 756 சதுர அடி பரப்பளவுள்ள சொத்து (T.S. எண் SO/1–ஐ உள்ளடக்கியது). மேற்கூறிய வீட்டு மனை மற்றும் அதனுடன் இணைந்த ஆர்.சி.சி. வீட்டுக் கட்டிடம், வாஹயாஹா, கதவு எண் 126, மதிப்பீட்டு எண் 115/092/02547. அனைத்து அசையும் மற்றும் பெறத்தக்க சொத்துக்களுடன், அதன் மீது தற்போதுள்ள அனைத்து கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள், அந்தந்த அடமானத் தேதியிலிருந்து அல்லது அதற்குப் பிறகு எந்த நேரத்திலும் அதன் மீது கட்டப்படக்கூடிய கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள், அவற்றுடன் செய்யப்படும் அனைத்து கூடுதல் கட்டுமானங்கள், மற்றும் பூமியுடன் இணைக்கப்பட்ட அல்லது பூமியுடன் இணைக்கப்பட்ட எதனுடனும் நிரந்தரமாகப் பொருத்தப்பட்டிருக்கும் தற்போதைய மற்றும் எதிர்கால அனைத்துப் பொருத்துதல்கள் மற்றும் தளபாடங்கள் ஆகியவை பின்வருமாறு எல்லையிடப்பட்டுள்ளன: **வடக்கில்** முந்தைய உரிமையாளராால் விற்கப்பட்ட பகுதி, **கிழக்கில்** முந்தைய உரிமையாளராால் விற்கப்பட்ட நிலம், **மேற்கில்** 6 அடி அகலப் பொதுப் பாதை, **தெற்கில்